அரசு பொதுத்தேர்வு 2022

1. ஆ) மணி வகை
2. ஆ) கொளல் வினா
3. அ) காடு
4. ஈ) சிலப்பதிகாரம்
5. ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
6. இ) தொடர் மொழி
7. ஈ) காற்றின் பாடல்
8. அ) புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை
9. ஆ) வேற்றுமை உருபு
10. ஈ) சிலப்பதிகாரம்
11. ஈ) கால் உடை - காலால் உடைத்தல்
12. இ) எம்+ தமிழ்+ நா
13. அ) பண்புத்தொகை
14. ஆ) தமிழ் மொழியை
15. இ) வேற்றுமொழியினர்

பகுதி **II**

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க 4 × 2 = 8

16. உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும். கவிதை வடிவம் வசன கவிதை எனப்படும். தமிழில் பாரதியார் இதனை அறிமுகம் செய்தார்.

17.அ. சொற்பொழிவுகளைக் கேட்டு தன் மூலமாக யார் இலக்கிய அறிவு பெற்றார்?

ஆ. எந்த ஆண்டு வ.உ .சிதம்பரனார் ஆங்கிலேயருக்கு எதிராக சுதேசிய கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்?

18. அறம் கூறும் மன்றங்கள் அரசின் அறநெறி ஆட்சிக்கு துணை புரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி அறம் அறக்கண்ட நெறிமான் நீதிமான் அவையும் என்கிறது புறநானூறு.

19. சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி இவையாவும் எஞ்சிய ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்.

20. நாற்று: நெல் கத்தரி
கன்று: மா புலி வாலை
குருத்து: வாழை
பிள்ளை: தென்னை
விடலி: பனை

21.முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

## பிரிவு 2

22. அ) இன்சொல் – பண்புத்தொகை. இனிமையான சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு.
ஆ) எழுகதிர் – வினைத்தொகை. மனித வாழ்க்கை எழுகதிர் போன்றது.

23. பகுபத உறுப்பிலக்கணம்.
வாழ்க = வாழ் + க; வாழ் - பகுதி ,க - வியங்கோள் வினைமுற்று விகுதி.

24. அ) விடு - வீடு
இளம் வயதிலே தீய பழக்கங்களை விட்டு விடு ; வீடு சென்று மகிழ்ச்சியாக இரு.
ஆ) கொடு - கோடு
ஆசிரியர் எழுதுகோலை மாணவனிடம் கொடுத்து , கோடு வரையச் சொன்னார்.

25. வெண்பா - செப்பலோசை ஆசிரியப்பா - அகவல் ஓசை.

26. கலைச்சொற்கள் தருக.
அ) Belief - நம்பிக்கை. ஆ) Philosopher - மெய்யியலாளர்

27. கோடையில் பள்ளி விடுமுறை என்பதால் ஆரல்வாய்மொழிக்குச் செல்லத் திட்டமிட்டிருக்கும் உறுதித்தன்மை நோக்கி காலவழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக இத்தொடர் அமைகிறது.

28. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்தி எழுதுக.

தே<u>னி</u>லே ஊ<u>றி</u>ய
தே<u>று</u>ம் கா<u>ர</u>மை
உ<u>ள்ளள</u>வும்
ஓதி யு<u>ண</u>ர்ந்தின் பு<u>று</u>

பகுதி- III. ( மதிப்பெண்கள் 18 )

29.
பிள்ளை – தென்னம் பிள்ளை வாங்கி வந்தேன் .
வடலி – காட்டில் பனை வடலியைப் பார்த்தேன்.
நாற்று – நெல் நாற்று நட்டேன்.
கன்று – வாழைக்கன்று நட்டேன்.
பைங்கூழ் – சோளப் பைங்கூழ் பசுமையாக உள்ளது.

30. அ. அறம் கூறும் மன்றங்கள்.
ஆ. அறம் கூறு அவையம் பற்றி அறம் கண்ட நெறிமான் அபயம் என்கிறது புறநானூறு
இ. துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது

31. ம.பொ.சி. வறுமையிலும் நூல் வாங்குவதற்குப் பணமில்லாத நிலையில் பழைய புத்தகங்கள் வாங்கி படிப்பார்.

இவர் விருப்பமான புத்தகங்களைக் குறைந்த விலைக்கு வாங்கும் வழக்கம் உள்ளவர்.
இவர் பல வேளைகளில் பட்டினி கிடந்து புத்தகம் வாங்கி ஆனந்தம் அடைவார்.
செவி வழியாகவும் இலக்கிய அறிவைப் பெற்றார்.

32.இராமனது வரலாற்றைக் கூறும் நூல்.
கம்பர் தம் எழுதிய நூலுக்கு இராமாவதாரம் எனப் பெயரிட்டார்.
ஆறு காண்டங்களை உடையது.
சந்தநயம் மிக்கது.

33.
அ)
அன்னை மொழியே! அழகான செந்தமிழே!
பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே!
குமரிக்கண்டத்தில் நிலைபெற்று அரசாட்சி செலுத்திய மண்ணுலகப் பேரரசே!
பாண்டியனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே!
பாட்டும், தொகையும் ஆனவளே! பதினெண்கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகானமணிமேகலையே!
கடல் கொண்ட குமரியில் நிலையாய் நின்று அரசாட்சி செய்த பெருந்தமிழ் அரசே!
பொங்கியெழும் நிணைவுகளால் தலைபணிந்து தமிழே உன்னை வாழ்த்துகின்றோம்.

34. அன்னை மொழியே அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே'
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!"

35.
மல்லிகைப்பூ
இரு பெயரொட்டுப் பண்புத்தொகை.
மல்லிகை என்னும் பூ (மல்லிகை – சிறப்புப் பெயர், பூ – பொதுப் பெயர்)
பூங்கொடி
உவமைத் தொகை - பூ போன்ற கொடி

தண்ணீர்த் தொட்டியில்
இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை

தண்ணீரை ஊற்றும் தொட்டி

குடிநீர் நிரப்பினாள்

இரண்டாம் வேற்றுமைத் தொகை
குடிநீரை நிரப்பினாள்

36. ஓர் அறையில், ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கானது அவ்வறையில் பல இடங்களிலும் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல் போலச் செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவதால் இவ்வணி தீவக அணி எனப்பட்டது.
தீவக அணி மூவகைப்படும். அவை:
முதல் நிலைத் தீவகம்
இடைநிலைத் தீவகம்
கடைநிலைத் தீவகம் எனப்படும்.
37. அலகிட்டு வாய்பாடு தருக.

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| கரு /வியும்/ | நிரை நிரை | கருவிளம் |
| கா/ லமும் | நேர் நிரை | கூவிளம் |
| | | |
| செய் / யும் | நேர் நேர் | தேமா |
| அரு / வினை/ யும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| மாண் / ட | நேர் நேர் | தேமா |
| தமைச் / சு | நிரைபு | பிறப்பு |
| செய் / கை/ யும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |

Padasalai.Net

இக்குறள் பிறப்பு என்னும் வாய்ப்பாடில் முடிகிறது.

பகுதி - **IV** ( மதிப்பெண்கள் - **25** )

38.
அ) முன்னுரை:
தாயின் அன்பை எழுத உலக மொழிகள் போதாது. தாயை இழந்த துயரம் சொல்லில் சொல்ல இயலாது. தாயை இழந்த கருணையனின் கண்ணீர் சொற்களை அறிவோம்.

வீரமாமுனிவரின் உவமை உருவக கவிதாஞ்சலி :
1) மலர்ப்படுக்கை :
கருணையனின் தாய் மறைந்துவிட்டாள். கருணையன் தன் கையைக் குவித்துப் பூமித்தாயே! என் அன்னையின் உடலைக் காப்பாயாக என்று கூறி,

குழியிலே மலர்ப்படுக்கையை பரப்பினான். அன்னையின் உடலை மண்ணிட்டு மூடி மலர்களையும் தன் கண்ணீரையும் பொழிந்தான்.
2) இளம்பயிர் வாட்டம்:
என் தாயின் மார்பில் மணிமாலையென அசைந்து வாழ்ந்தேனே! இப்பொழுது. இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து காய்ந்து மணியாகு முன்பே, தூய மணி போன்ற மழைத்துளி இன்றி வாடிக் காய்ந்து விட்டது போல நானும் வாடுகிறேன். என் மனம் மரக்கிளையில் இருந்து பறிக்கப்பட்ட மலர்போல் வாடுகிறது.
3) அம்பு துளைத்த வேதனை:
தீயையும் நஞ்சையும் தன் முனையில் கொண்ட அம்பு துளைத்ததால் ஏற்படும் புண்ணின் வரியைப் போல என் துயரம் வேதனை தருகிறது. துணையைப் பிரிந்த ஒரு பறவையைப் போல நான் இக்காட்டில் அழுது வாடுகிறேன்.
4) தவிப்பு :
சரிந்த வழுக்கு நிலப்பகுதியிலே தனியே விடப்பட்டுச் செல்லும் வழிதெரியாமல் தவிப்பவன் போல் ஆனேன். நவமணிகள் பதித்த மணிமாலைகளை இணைத்தது போன்று நல்ல அறன்கள் எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிந்த மார்பனாகிய கருணையன் புலம்பினான்.
5) உயிர்கள் அழுதல்:
புலம்பலைக் கேட்டு பல்வேறு இசைகளை இயக்கியது போல் தேன் மலர்கள் தோறும் மணம் வீசும் மலர்களும், மலர்ந்த சுனை தோறும் உள்ள பறவைகளும், வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போல கூச்சலிட்டன.

முடிவுரை:வீரமாமுனிவர் உவமை, உருவக மலர்களால் தன் கவிதை மூலம் எலிசபெத்துக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

அல்லது

ஆ) காலக் கணிதம்
1.கவிஞன் நான் ஓர் காலக்கணிதம் கருவாகிய பொருளை உருப்பட வைப்பேன். பூமியில் புகழுக்கு உரிய தெய்வம் நான்.
பொன்னைவிட உயர்ந்தது என் செல்வம்.
2.ஒரு செயல் சரி என்றால் எடுத்துச் சொல்வேன்; தவறு என்றால் எதிர்ப்பேன். அதுதான் என் வேலை.
3.முத்தொழில் நானும் அவனும் மட்டுமே அறிந்தது. செல்வர் வாளில் சிறைப்பட மாட்டேன். பதவி வாளுக்குப் பயப்பட மாட்டேன். அன்பும், விருப்பமும் மிகுந்து ஆசை தருவதை விரும்புவேன்.
4.என்னிடம் உண்டு என்றால், பிறர் உண்ணத் தருவேன். இல்லை என்றால் பிறர் இல்லம் தட்டுவேன். வண்டு போல மாறி மலரில் அமர்ந்து, குடித்த தேனை ஊர்ப்புறம் தருவேன்.
5.கம்பன், பாரதி, பாரதிதாசன் ஆகியோர் சொல்லாத கருத்துகளைச் சொல்லிட முயற்சிப்பேன். என்னுடல் புகழ்ந்தால் புல்லரிக்காது. இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது.
6.என் கவிதை வாக்குமூலம் அதை வைத்து இறந்த பிறகு தீர்ப்பை எழுதுங்கள். கல், மரம், விலங்காக மாற நான் காட்டு விலங்கு கிடையாது.
மாற்றம் எனது மானிடத் தத்துவம். மாறும் உலகின் மகத்துவம் அறிவேன். நன்மை, தீமை அறிந்து ஏற்கும் என் சாலை.

7.தலைவர் மாறுவார்கள், தர்பார் மாறும், தத்துவம் மட்டும் குறையாத அட்சயப் பாத்திரம் ஏற்றுக்கொள்வோர் ஏற்றுக்கொள்ளட்டும். குரைப்போர் குரைக்கட்டும்.
வாய்ச்சொற்கள் உடம்பினைத் தொடாது. நானே தொடக்கம் நானே முடிவு. நான் சொல்வதுதான் நாட்டின் சட்டம்.

39.
அ) உறவினர் கடிதம்.

ஆ) மின்வாரிய அலுவலருக்குக் கடிதம்.

அனுப்புநர்:

பெறுநர்:

நன்றி!

அஅஅ.
06.05.2022

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
கண்ணன்.

உறைமேல் முகவரி:
பெறுநர்

40.




41. மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண் : தேதி : 06/05/22 வகுப்பும் பிரிவும்: அறிவியல்

1.மாணவ / மாணவியின் பெயர் : குணசேகரன்
2.பிறந்த தேதி : 16/10/2005
3.தேசிய இனம் : இந்தியன்
4.பெற்றோர்/ பாதுகாவலர் பெயர் : வெற்றிச்செல்வன்
: 9, வ உ. சிதம்பரனார் தெரு,
கரூர்.
6.இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு : பத்தாம் வகுப்பு ( 10 )
7.பயின்ற மொழி : தமிழ்
8. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : அரசு உயர்நிலைப் பள்ளி,
கரூர்

9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் : 495

| தேர்வின் பெயர் | பத்தாம் வகுப்பு | பாடம் | மதிப்பெண் |
|---|---|---|---|
| அரசுப் பொதுத் தேர்வு | | தமிழ் | 95 |
| | | ஆங்கிலம் | 100 |
| | | கணிதம் | 100 |
| | | அறிவியல் | 100 |
| | | சமுக அறிவியல் | 100 |
| | | மொத்தம் | 495 |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம், இணைக்கப்பட்டுள்ளது.

11. தாய்மொழி : தமிழ்

12.சேர விரும்பும் பாடப்பிரிவும்
பயிற்று மொழியும் : கணிதம் – உயிரியல், தமிழ்

குணசேகரன்

42.
அ)ஐந்து நல்ல பண்புகள்

ஆ) மொழிபெயர்ப்பு

தங்கநிற சூரியன் தினமும் அதிகாலையில் எழுந்து , பிரகாசமான ஒளிக்கதிர்களால் இருளைப் போக்குகிறது .பால் போன்ற மேகங்கள் அலைகின்றன . வண்ணமயமான பறவைகள் சிறகுகளை அடித்து காலை இசையைத் தொடங்குகின்றன . அழகான வண்ணத்துப் பூச்சிகள் மலர்களை சுற்றி நடனமாடும் . மலர்களின் நறுமணம் தென்றல் காற்றை நிரப்புகிறது . இத் தென்றல் மென்மையாக உலவி எல்லா இடங்களிலும் , எல்லாப் பொருள்களிலும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது .

பகுதி **- V (** மதிப்பெண்கள் **24)**

43. சங்க காலத்து அறங்கள் ( அ). சொல்வளம்
44.அன்னமய்யா ( அ) ஒருவன் இருக்கிறான்
45. சாலை பாதுகாப்பு (அ) மக்கள் பணியே மகத்தான பணி

ஞா.ஜோ.அந்தோனி பிரகாஷ்,
இளநிலை பட்டதாரி ஆசிரியர்,
மதுரை.